# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1998 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

---

*(1998, ஓகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*1998, செத்தெம்பர் மாதம் 04 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

# 1998 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.— ஓ 40/ 97

## 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம், 1998 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

1981 ஆம் ஆண்டின் 69ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 69 ஆம் இலக்க, மொத்த விற்பனை வரவு வரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியை நீக்குவதன் மூலமும் ; அத்துடன்

(ஆ) அப்பந்தியின் (iv) ஆம் உட்பந்தியை அப்பந்தியின் (iii) ஆம் உட்பந்தியாக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியின் (1) ஆம் உட்பந்தியில் உள்ள "இருபத்தைந்து சதவீதத்தால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பத்து சதவீதத்தால்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில், பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

2-ம 048998-1,685 (98/06)

"(6) சினிமாத் திரைப்படங்களைக் காண்பிக்கின்ற ஏதேனும் தொழிலினது ஏதேனும் காலாண்டுக்கான மொத்த விற்பனை வரவை உறுதிப்படுத்துவதில், 1996, ஒக்றோபர் 24 ஆம் தேதிய 946/9 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட 1971 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 5ஆம், 61 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் 2ஆம் ஒழுங்குவிதியின் கருத்தெல்லைக்குள்ளானதும் அத்தொழில் தொடர்பில் அக்காலாண்டில் சேகரிக்கப்பட்டதுமான ஏதேனும் "அதிகரிப்பு"க்குச் சமனான தொகையானது கழிக்கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டமானது, நடைமுறைக்கு வருகின்றதான தேதிக்கு முன்னர் ஏதேனும் பொருளை இறக்குமதி செய்கின்ற ஒவ்வோர் ஆளிடமிருந்தும்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 47 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :–

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவுகளை இடுவதன் மூலமும் :–

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இறுதிக் காலாண்டுக்கு முந்திய காலாண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கழிக்கப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் ஏதேனும் மீதியானது, மிஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய மீதித்தொகையானது இறுதிக்

காலாண்டுக்கென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் எவரேனும் ஆளினால் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து, அது அவ்வாறு கழிக்கப்படக்கூடிய அளவுக்கு கழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழித்த பின்னர் மிஞ்சியிருக்கும் ஏதேனும் மீதித் தொகையானது, 49 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஆறு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக "கடைசிக் காலாண்டு" என்பது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடைகின்ற காலாண்டு என்று பொருளாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 2 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் தொழிலுக்கு ஏற்புடையதாதலாகாது.".

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— *முதன்மைச் சட்டவாக்கத்தின் 48 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

(1) அப்பிரிவினை, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவாக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(2) மீள இலக்கமிடப்பட்ட உட்பிரிவு (1) ஐ உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(2) இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், இறுதிக் காலாண்டுக்கு முந்திய காலாண்டுகள் ஒவ்வொன்றுக்காகவும் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்கக் கழிக்கப்படற்

பாலதான மொத்த விற்பனை வரவு வரியின் ஏதேனும் மீதியானது, எஞ்சியிருக்கின்றவிடத்து, அத்தகைய மீதித் தொகையானது இறுதிக் காலாண்டுக்கென (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட மொத்த விற்பனை வரவு தொடர்பில் எவரேனும் ஆளினால் கொடுபடற்பாலதான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து, அது அவ்வாறு கழிக்கப்படக்கூடிய அளவுக்குக் கழிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு கழித்ததன் பின்னர் மிஞ்சியிருக்கும் ஏதேனும் மீதித் தொகையானது, 49ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஆறு மாதங்கள் முடிவடைந்ததன் பின்னர் மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக "கடைசிக் காலாண்டு" என்பது 1996 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, பண்டங்கள், சேவைகள் என்பன மீதான வரிச் சட்டம் நடைமுறைக்கு வரும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று முடிவடைகின்ற காலாண்டு என்று பொருளாகும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள், 2 ஆம் பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் தொழிலுக்கு ஏற்புடையதாதலாகாது.".

குறித்தசில பொருட்களின் இறக்குமதி அல்லது உற்பத்தி மீதான வரிவீதம் தொடர்பான சிறப்பு ஏற்பாடு.

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதிய 869/2 ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளையின் 1 ஆம் பாகத்தின் 3 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பதிவில் உள்ள விவரணத்துக்குள் வருவதும் அக்கட்டளையின் அப்பாகத்தின் 2 ஆம் நிரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள 84 ஆம் இலக்கத் தலைப்பின் கீழான 8424.81 ஆம் இலக்க

இசைவாக்கப்பட்ட முறைமைக் கோவை தொடர்பிலான பதிவுக்கு நேரொத்ததுமான ஏதேனும் பொருளை உற்பத்திசெய்கின்ற ஒருவராக அல்லது இறக்குமதி செய்கின்ற ஒருவராகத் தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற எவரேனும் ஆளின் மொத்த விற்பனை வரவு தொடர்பில் செலுத்தப்படற்பாலதான மொத்த விற்பனை வரவு வரி வீதமானது, 1993, சனவரி 29 ஆம் தேதிய 751/20ஆம் இலக்க, அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்டதும், அச்சட்டத்தின் அப்பிரிவின்கீழ் ஆக்கப்பட்டதுமான கட்டளையில் முரணாக உள்ளது, எது எப்படியிருப்பினும் –

(i) 1993, சனவரி 29 ஆம் தேதியன்று தொடங்கி 1995, பெப்புருவரி 7 ஆம் தேதியன்று முடிவுறும் காலப்பகுதிக்கு ஐந்து சதவீதமாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) 1995, பெப்புருவரி 8 ஆம் தேதியன்று தொடங்கி 1995, ஏப்பிறல் 30 ஆம் திகதியன்று முடிவுறும் காலப் பகுதிக்கு ஆறு சதவீதமாக இருத்தல் வேண்டும்.

ஆடைகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள தொழிலுக்கான குறித்த சில சேவைகளின் வழங்குகைகள் மீதான மொத்த விற்பனை வரவு வரி விலக்களிப்பு.

8. (i) காரிக்கன் துணியை உருவாக்கி முடிக்கப்பட்ட துணியாக மாற்றுகின்ற ; அல்லது

(ii) இரசாயன முறையாகக் கழுவுதல் அல்லது சாயமூட்டுதல் அல்லது பூத்தையல் வேலை, அலங்கார வேலை அல்லது தொடர் அச்சுமுறை மூலம் ஆடைகளின் தரத்தையும் தன்மையையும் சீர்திருத்துகின்ற,

சேவைகளை, ஆடைகளை ஏற்றுமதி செய்வதில் ஈடுபட்டுள்ள ஏதேனும் தொழிலுக்கு வழங்குகின்ற ஒவ்வொரு தொழிலும், முதன்மைச் சட்டவாக்கத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றில் முரணாக உள்ளது, எது எப்படியிருப்பினும், 1992, சனவரி 1 ஆம் திகதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குகின்ற ஒவ்வொரு காலாண்டுக்கும், ஆனால் 1995, ஒக்றோபர் 1 ஆம் திகதிக்கு முன்னர் அத்துடன் 1995, ஒக்றோபர் 1 ஆம் திகதியன்று தொடங்கி 1995, நவெம்பர் 8 ஆம் திகதியன்று முடிவடையும் காலப்பகுதிக்கான மொத்த விற்பனை வரவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுதலும், விலக்களிக்கப்பட்டதாகவிருத்தலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.